No. of Printed Pages : 28

215320

+2

6357

பதிவு எண்
Register Number

| J | U | L | Y | - | 2 | 2 |
|---|---|---|---|---|---|---|

# PART - III

# கணக்குப்பதிவியல் / ACCOUNTANCY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ]
Time Allowed : 3.00 Hours ]

[ மொத்த மதிப்பெண்கள் : 90
[ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I/PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

1. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4 : 2 : 3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் :

(அ) 4 : 3
(ஆ) 3 : 4
(இ) 2 : 1
(ஈ) 1 : 2

A, B, C are partners sharing profits in the ratio 4 : 2 : 3. 'C' retires. The new profit sharing ratio between A & B will be :

(a) 4 : 3
(b) 3 : 4
(c) 2 : 1
(d) 1 : 2

2. முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாகப் பராமரித்து வருவது :

(அ) நிறுமம்
(ஆ) அரசு
(இ) சிறிய அளவிலான தனியாள் வணிகம்
(ஈ) பன்னாட்டு நிறுவனங்கள்

Incomplete records are generally maintained by :

(a) a company
(b) government
(c) small sized sole trader business
(d) multinational enterprises

3. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது :

(அ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம்
(ஆ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்
(இ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள்
(ஈ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு

Balance of receipts and payments account indicates the ________.

(a) loss incurred during the period
(b) excess of income over expenditure of the period
(c) total cash payments during the period
(d) cash and bank balance as on date

4. உயில்கொடை ஒரு :

(அ) வருவாயினச் செலவு (ஆ) முதலினச் செலவு

(இ) வருவாயின வரவு (ஈ) முதலின வரவு

Legacy is a _________.

(a) Revenue expenditure (b) Capital expenditure

(c) Revenue receipt (d) Capital receipt

5. கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால் அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம் 1932 -ன்படி வழங்கப்படும் வட்டி விகிதம் :

(அ) ஆண்டுக்கு 8% (ஆ) ஆண்டுக்கு 12%

(இ) ஆண்டுக்கு 5% (ஈ) ஆண்டுக்கு 6%

As per Indian Partnership Act, 1932, the rate of interest allowed on loan advanced by partner is _________.

(a) 8% per annum (b) 12% per annum

(c) 5% per annum (d) 6% per annum

6. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக :

(அ) 5.5 மாதங்கள் (ஆ) 6 மாதங்கள்

(இ) 12 மாதங்கள் (ஈ) 6.5 மாதங்கள்

When a partner withdraws regularly a fixed sum of money at the middle of every month, period for which interest is to be calculated on the drawings on an average is _________.

(a) 5.5 months (b) 6 months

(c) 12 months (d) 6.5 months

7. உயர் இலாபம், பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்.

(அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம்

(ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்

(இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்

(ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

Super profit is the difference between ________.

(a) Capital employed and average profit

(b) Assets and liabilities

(c) Average profit and normal profit

(d) Current year's profit and average profit

8. மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது :

(அ) ஆதாயம்

(ஆ) நட்டம்

(இ) செலவு

(ஈ) இவற்றுள் ஏதுமில்லை

On revaluation, the increase in the value of assets leads to :

(a) Gain

(b) Loss

(c) Expense

(d) None of these

9. பொருத்துக :

| | |
|---|---|
| (1) தியாக விகிதம் | (i) முதலீட்டு மாறுபடும் நிதி |
| (2) பழைய இலாபப் பகிர்வு விகிதம் | (ii) பகிர்ந்துதரா இலாபம் |
| (3) மறுமதிப்பீட்டு கணக்கு | (iii) நற்பெயர் |
| (4) முதல் கணக்கு | (iv) பதிவுறா பொறுப்பு |

(அ) (1)-(i), (2)-(ii), (3)-(iii), (4)-(iv)

(ஆ) (1)-(iii), (2)-(ii), (3)-(iv), (4)-(i)

(இ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(ஈ) (1)-(iii), (2)-(i), (3)-(ii), (4)-(iv)

Match the following :

| | |
|---|---|
| (1) Sacrificing ratio | (i) Investment Fluctuation Fund |
| (2) Old profit sharing ratio | (ii) Accumulated profit |
| (3) Revaluation Account | (iii) Goodwill |
| (4) Capital Account | (iv) Unrecorded Liability |

(a) (1)-(i), (2)-(ii), (3)-(iii), (4)-(iv)

(b) (1)-(iii), (2)-(ii), (3)-(iv), (4)-(i)

(c) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)

(d) (1)-(iii), (2)-(i), (3)-(ii), (4)-(iv)

**10.** பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள் :

(அ) நட்டம் (ஆ) ரொக்கம் (இ) முதல் (ஈ) இலாபம்

The excess of assets over liabilities is :

(a) loss (b) cash (c) capital (d) profit

**11.** சொத்துகளை வாங்கி பங்குகள் வெளியிடும்போது வரவு வைக்கப்படும் கணக்கு :

(அ) விற்பனையாளர் கணக்கு (ஆ) பற்பல சொத்துகள் கணக்கு

(இ) பங்கு முதல் கணக்கு (ஈ) வங்கி கணக்கு

When shares are issued for purchase of assets, the amount should be credited to :

(a) Vendor's Account (b) Sundry Assets Account

(c) Share Capital Account (d) Bank Account

**12.** நிறுமக் கலைப்பின்போது மட்டுமே அழைக்கப்படக்கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி ________ என அழைக்கப்படும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட முதல் (ஆ) அழைக்கப்பட்ட முதல்

(இ) முதலினக் காப்பு (ஈ) காப்பு முதல்

The part of share capital which can be called up only on winding up of a company is called ________.

(a) authorised capital (b) called up capital

(c) capital reserve (d) reserve capital

**13.** நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 50,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றுக்கு ₹ 3 வீதம் முனைமத்தில் வெளியிட்டது. முனைமத் தொகை ________.

(அ) ₹ 1,00,000 (ஆ) ₹ 50,000 (இ) ₹ 1,50,000 (ஈ) ₹ 2,00,000

A company issued 50,000 equity shares of ₹ 10 each at a premium of ₹ 3/share. Premium amount is ________.

(a) ₹ 1,00,000 (b) ₹ 50,000 (c) ₹ 1,50,000 (d) ₹ 2,00,000

**14.** ஒரு பொது அளவு இருப்புநிலை குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 60 எனில், நடப்பு சொத்துகளின் சதவீதம் எவ்வளவு ?

(அ) 175 (ஆ) 125 (இ) 25 (ஈ) 40

In a common-size balance sheet, if the percentage of non-current asset is 60, what would be the percentage of current assets ?

(a) 175 (b) 125 (c) 25 (d) 40

**15.** பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல ?

(அ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.

(ஆ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது முடிவல்ல.

(இ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.

(ஈ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துகளை உள்ளடக்கியதாகும்.

Which of the following statements is not true ?

(a) All the limitations of financial statements are applicable to financial statement analysis also.

(b) Financial statement analysis is only the means and not an end.

(c) Expert knowledge is not required in analysing the financial statements.

(d) Interpretation of the analysed data involves personal judgement.

**16.** பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துகளுக்கும் உள்ள விகிதாச்சாரம் :

(அ) உரிமையாளர் விகிதம் (ஆ) முதல் உந்துதிறன் விகிதம்

(இ) புற அக பொறுப்பு விகிதம் (ஈ) நடப்பு விகிதம்

Proportion of share holder's funds to total assets is called :

(a) Proprietary ratio (b) Capital gaining ratio

(c) Debt equity ratio (d) Current ratio

17. இலாபத் தன்மை விகிதங்கள் ________ -ல் வெளிப்படுத்தப்படுகின்றன.

(அ) மடங்கு (ஆ) விகிதாச்சாரம்

(இ) சதவிகிதம் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

Profitability ratios are expressed as a ________.

(a) in multiples (b) proportion

(c) percentage (d) All of the above

18. சம்பளக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும் ?

(அ) நேரடி வருமானங்கள் (ஆ) நேரடி செலவினங்கள்

(இ) மறைமுக வருமானங்கள் (ஈ) மறைமுக செலவினங்கள்

Salary account comes under which of the following head ?

(a) Direct Incomes (b) Direct Expenses

(c) Indirect Incomes (d) Indirect Expenses

19. Tally -ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடு(கள்) :

(i) ரொக்கம் (ii) இலாப நட்டக் க/கு (iii) முதல் க/கு

(அ) (i) மட்டும் (ஆ) (ii) மட்டும்

(இ) (i) மற்றும் (ii) மட்டும் (ஈ) (ii) மற்றும் (iii) மட்டும்

What are the predefined ledger(s) in Tally ?

(i) Cash (ii) Profit & Loss A/c (iii) Capital A/c

(a) (i) only (b) (ii) only

(c) (i) and (ii) only (d) (ii) and (iii) only

**20.** சராசரி இலாபம் ₹ 50,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 30,000 ஆக இருக்கும்போது, உயர் இலாபம் :

(அ) ₹ 25,000 (ஆ) ₹ 5,000 (இ) ₹ 20,000 (ஈ) ₹ 15,000

When the average profit is ₹ 50,000 and the normal profit is ₹ 30,000, Super profit is :

(a) ₹ 25,000 (b) ₹ 5,000 (c) ₹ 20,000 (d) ₹ 15,000

## பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question number **30** is **compulsory**.

**21.** முழுமைபெறா பதிவேடுகள் என்றால் என்ன ?

What is meant by Incomplete records ?

**22.** இலாப நோக்கமற்ற அமைப்பின் முதலின வரவுகளுக்கு ஏதேனும் நான்கு எடுத்துக்காட்டுகளைத் தரவும்.

Give four examples for capital receipts of not-for-profit organisation.

**23.** கெவின் மற்றும் பிரான்சிஸ் இருவரும் கூட்டாளிகள். கெவின் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் ₹ 5,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீதான வட்டி ஆண்டுக்கு 6%. 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கணக்கிடவும்.

Kevin and Francis are partners. Kevin draws ₹ 5,000 at the end of each quarter. Interest on drawings is chargeable at 6% p.a. Calculate interest on drawings for the year ending 31st March 2019 using average period.

24. சாதாரண இலாப விகிதம் என்றால் என்ன ?

What is normal rate of return ?

25. A மற்றும் B என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2019 அன்று புதிய கூட்டாளியாக C என்பவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சேர்க்கையின்போது, நிறுவன ஏடுகளில் பொதுக் காப்பு ₹ 42,000 என காட்டியது. பொதுக் காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டு பதிவினைத் தரவும்.

A and B are partners sharing profits and losses in the ratio of 4 : 3. On 31.3.2019 C was admitted. On the date of admission the book of the firm showed a general reserve of ₹ 42,000. Pass the journal entry to distribute the general reserve.

26. ஆதாய விகிதம் என்றால் என்ன ?

What is gaining ratio ?

27. Tally ERP-9 -ல் குழு என்றால் என்ன ?

What is a group in Tally ERP-9 ?

28. நடைமுறை முதல் என்றால் என்ன ?

What is working capital ?

29. பின்வரும் விவரங்களிலிருந்து இயக்க இலாப விகிதம் கணக்கிடவும்.

விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ₹ 10,00,000. மொத்த இலாபம் விற்பனையிலிருந்து பெற்ற வருவாயில் 25%. இயக்க செலவுகள் ₹ 1,00,000.

Calculate operating profit ratio from the following data.

Revenue from operations ₹ 10,00,000 Gross profit 25% on revenue from operations, operating expenses ₹ 1,00,000.

**30.** யுனைடட் இண்டஸ்ட்ரிஸ் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 1,00,000 நேர்மை பங்குகளை வெளியிட்டது. அனைத்துத் தொகையும், விண்ணப்பத்துடன் செலுத்துமாறு, பங்கொன்று ₹ 2 முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டு பதிவினைத் தரவும்.

United Industries Ltd. issues 1,00,000 equity shares of ₹ 10 each payable fully on application. Pass journal entries if shares are issued at a premium of ₹ 2 per share.

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question number **40** is **compulsory**.

**31.** பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிற்கும், வருவாய் மற்றும் செலவினக் கணக்கிற்கும் உள்ள வேறுபாடுகளைத் தரவும்.

State the difference between Receipts and Payments Account and Income and Expenditure Account.

**32.** 2018, ஜனவரி 1 அன்று பேகம் மற்றும் பாத்திமா என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகள் முறையே ₹ 50,000 மற்றும் ₹ 40,000 இருப்பினைக் காட்டியது. 2018, அக்டோபர் 1 அன்று பேகம் கூடுதல் முதலாக ₹ 10,000 கொண்டு வந்தார் மற்றும் 2018, மே 1 அன்று பாத்திமா கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 9,000. டிசம்பர் 31, 2018 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 4% வீதம் கணக்கிடவும்.

The capital account of Begum and Fatima on 1.1.2018 showed a balance of ₹ 50,000 and ₹ 40,000 respectively. On 1$^{st}$ October 2018, Begum introduced an additional capital of ₹ 10,000 and on 1$^{st}$ May 2018, Fatima introduced an additional capital of ₹ 9,000.
Calculate interest on capital at 4% p.a. for the year ending 31$^{st}$ December 2018.

**33.** ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

(அ) 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் இலாபங்கள் முறையே ₹ 10,000, ₹ 12,500, ₹ 12,000 மற்றும் ₹ 11,500.

(ஆ) வியாபாரம், கூட்டாளிகளில் ஒருவரால் நடத்தபட்டது. அக்கூட்டாளியின் நியாயமான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹ 1,500. இந்த தொகை மேற்கொண்ட இலாபங்களைக் கணக்கிடும்போது சேர்க்கப்படவில்லை.

From the following information relating to a partnership firm, find out the value of its goodwill based on 3 years purchase of average profits of the last 4 years.

(a) Profit of the years 2015, 2016, 2017 and 2018 are ₹ 10,000, ₹ 12,500, ₹ 12,000 and ₹ 11,500 respectively.

(b) The business was looked after by a partner and his fair remuneration amounts to ₹ 1,500 per year. This amount was not considered in the calculation of the above profits.

**34.** மாலா மற்றும் அனிதா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 3 : 2 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். மெர்சி என்பவர் $\frac{1}{5}$ இலாப விகிதத்தில் கூட்டாண்மையில் கூட்டாளியாக சேருகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடவும்.

Mala and Anitha are partners, sharing profits and losses in the ratio of 3 : 2 Mercy is admitted into the partnership with $\frac{1}{5}$ share in the profits. Calculate new profit sharing ratio and sacrificing ratio.

**35.** கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.

List out the adjustments made at the time of retirement of a partner in a partnership firm.

**36.** பாரத் நிறுமம் ₹ 10 மதிப்புள்ள 1,00,000 பங்குகளை முகமதிப்பில் பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத் தொகை, பங்கு ஒன்றுக்கு ₹ 5. 1,20,000 பங்குகளுக்கு விண்ணப்பத் தொகை பெறப்பட்டது. கூடுதல் விண்ணப்பத் தொகை உடனடியாக திருப்பி செலுத்தப்பட்டது. மேற்கண்டவற்றை பதிவு செய்ய குறிப்பேட்டுப் பதிவுகளை தரவும்.

Bharath Ltd. issued 1,00,000 equity shares of ₹ 10 each at par. Application money is ₹ 5 per share. Application money was received for 1,20,000 shares. Excess application money was refunded immediately. Pass journal entries to record the above.

**37.** டேனியல் நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து, ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயார் செய்யவும்.

| விவரம் | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 40,000 | 50,000 |
| இயக்கச் செலவுகள் | 25,000 | 27,500 |
| வருமான வரி % (வரிக்கு முன்னர் உள்ள இலாபத்தில்) | 30 | 30 |

From the following particulars, prepare comparative income statement of Daniel Ltd.

| **Particulars** | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| Revenue from operations | 40,000 | 50,000 |
| Operating expenses | 25,000 | 27,500 |
| Income tax (% of the profit before tax) | 30 | 30 |

38. இயக்க இலாபம் எவ்வாறு கண்டறியப்படுகிறது ?

How is operating profit ascertained ?

39. Tally ERP-9 -ல் இலாப நட்டக் கணக்கை எவ்வாறு பார்வையிடுவது என்பதை விளக்கவும்.

Explain how to view profit and loss statement in Tally ERP-9.

40. பின்வரும் விவரங்களைக் கொண்டு அவ்வாண்டின் மொத்த விற்பனையைக் கண்டறியவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2019, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 1,00,000 |
| அவ்வாண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,00,000 |
| உள்திருப்பம் | 30,000 |
| வாராக் கடன் | 10,000 |
| 2020, மார்ச் 31 அன்று கடனாளிகள் | 1,20,000 |
| ரொக்க விற்பனை | 2,40,000 |

From the following details find out total sales made during the year.

| Particulars | ₹ |
|---|---|
| Debtors on 1st April 2019 | 1,00,000 |
| Cash received from debtors during the year | 2,00,000 |
| Returns inward | 30,000 |
| Bad debts | 10,000 |
| Debtors on 31st March 2020 | 1,20,000 |
| Cash sales | 2,40,000 |

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018, ஏப்ரல் 1 அன்று பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 60,000 | உள்திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019, மார்ச் 31 அன்று பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019, மார்ச் 31 அன்று பற்பல கடனாளிகள் | 2,40,000 |
| வாராக் கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

**அல்லது**

(ஆ) நிலை முதல் முறைக்கும் மாறுபடும் முதல் முறைக்கும் இடையேயான வேறுபாடுகளைத் தரவும்.

(a) From the following particulars, calculate total sales.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Debtors on 1st April 2018 | 2,50,000 | Bills Receivable dishonoured | 15,000 |
| Bills Receivable on 1st April 2018 | 60,000 | Returns Inward | 50,000 |
| Cash Received from debtors | 7,25,000 | Bills Receivable on 31st March 2019 | 90,000 |
| Cash Received for bills receivable | 1,60,000 | Debtors on 31st March 2019 | 2,40,000 |
| Bad debts | 30,000 | Cash sales | 3,15,000 |

**OR**

(b) Differentiate Fixed capital and Fluctuating capital method.

**42.** (அ) 2018, ஏப்ரல் 1 அன்று சுபா தன்னுடைய தொழிலை ₹ 1,20,000 முதலுடன் தொடங்கினார். அவர் முறையான கணக்கேடுகளைப் பராமரிக்கவில்லை. 2019, மார்ச் 31 அன்று அவருடைய ஏடுகளிலிருந்து பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு :

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| வங்கி மேல்வரைப்பற்று | 50,000 | சரக்கிருப்பு | 1,60,000 |
| கடனாளிகள் | 1,80,000 | கடனீந்தோர் | 90,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 70,000 | செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 2,40,000 |
| கணினி | 30,000 | கைரொக்கம் | 60,000 |
| இயந்திரம் | 3,00,000 | | |

அவ்வாண்டில் அவர் தன்னுடைய சொந்த பயனுக்காக ₹ 30,000 எடுத்துக் கொண்டார். அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த கூடுதல் முதல் ₹ 40,000. அவருடைய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

**அல்லது**

(ஆ) சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும்போது அவர்கள் பின்வரும் முடிவு எடுத்தனர்.

(i) கட்டடம் மதிப்பினை ₹ 40,000 உயர்த்த வேண்டும்.

(ii) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ₹ 10,000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டு வர வேண்டும்.

(iii) இயந்திரம் மதிப்பு ₹ 14,000 மற்றும் அறைகலன் மதிப்பு ₹ 12,000 குறைக்க வேண்டும்.

(iv) பற்பல கடனீந்தோரில் ₹ 16,000 போக்கெழுத வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் மறுமதிப்பீட்டு கணக்கினைத் தயார் செய்யவும்.

(a) On 1st April 2018 Subha started her business with a capital of ₹ 1,20,000. She did not maintain proper book of accounts. Following particulars are available from her books as on 31-3-2019.

| Particulars | ₹ | Particulars | ₹ |
|---|---|---|---|
| Bank overdraft | 50,000 | Stock-in-Trade | 1,60,000 |
| Debtors | 1,80,000 | Creditors | 90,000 |
| Bills receivable | 70,000 | Bills payable | 2,40,000 |
| Computer | 30,000 | Cash in hand | 60,000 |
| Machinery | 3,00,000 | | |

During the year she withdrew ₹ 30,000 for her personal use. She introduced further capital of ₹ 40,000 during the year. Calculate her profit or loss.

**OR**

(b) Seenu and Siva are partners sharing profits and losses in the ratio of 5 : 3, In view of Subbu's admission, they decided :

(i) To increase the value of building by ₹ 40,000.

(ii) To bring into record investments at ₹ 10,000 which have not so far been brought into account.

(iii) To decrease the value of machinery by ₹ 14,000 and furniture by ₹ 12,000.

(iv) To write off sundry creditors by ₹ 16,000

Pass Journal entries and prepare revaluation account.

43. (அ) மயிலாடுதுறை மனமகிழ் மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 -ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ₹ | விவரம் | ₹ |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 15,000 | மன்ற ஆண்டு விழாச் செலவுகள் | 15,000 |
| தொடக்க வங்கி இருப்பு | 25,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| நன்கொடை பெற்றது | 48,000 | பொழுதுபோக்குச் செலவுகள் | 13,500 |
| பழைய உபகரணங்கள் விற்றது | 26,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5,000 |
| சிற்றுண்டி செலவுகள் | 13,000 | அறக்கொடை நாடகக் காட்சி செலவுகள் | 3,000 |
| மன்ற ஆண்டு விழா வசூல் | 18,000 | முதலீடுகள் விற்றது | 12,000 |
| டென்னிஸ் மைதான கட்டுமானச் செலவுகள் | 7,000 | இறுதி ரொக்க இருப்பு | 12,000 |
| அறக்கொடை நாடகக் காட்சி வசூல் | 4,000 | | |
| வாடகை செலுத்தியது | 1,000 | | |
| காவலாளிக்குச் சம்பளம் கொடுத்தது | 12,000 | | |

அல்லது

(ஆ) கஜா வரையறு நிறுமம் பங்கு ஒன்றின் மதிப்பு ₹ 10 வீதம் 40,000 நேர்மைப் பங்குகளை பொதுமக்களிடம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ₹ 2, ஒதுக்கீட்டின் போது ₹ 5, முதலாம் மற்றும் இறுதி அழைப்பின் போது ₹ 3 என தொகை செலுத்தப்பட வேண்டும். 50,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 40,000 பங்குகளுக்கு விகித அளவு அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டன. கூடுதலாக உள்ள விண்ணப்பத் தொகை ஒதுக்கீட்டிற்கு பயன்படுத்தப்பட்டது. அனைத்து தொகையும் முறையாக பெறப்பட்டன எனக் கொண்டு, குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

(a) Mayiladuthurai Recreation Club gives you the following details. Prepare Receipts and Payments account for the year ended 31st March 2019.

| **Particulars** | **₹** | **Particulars** | **₹** |
|---|---|---|---|
| Opening cash balance | 15,000 | Salary of watchman | 12,000 |
| Opening bank balance | 25,000 | Club annual day expenses | 15,000 |
| Donations received | 48,000 | Lighting charges | 16,500 |
| Sale of old equipment | 26,000 | Entertainment expenses | 13,500 |
| Refresh charges | 13,000 | Billiards table purchased | 5,000 |
| Club annual day collections | 18,000 | Expenses of charity show | 3,000 |
| Construction of tennis court | 7,000 | Sale of Investments | 12,000 |
| Receipts from charity show | 4,000 | Closing cash balance | 12,000 |
| Rent paid | 1,000 | | |

**OR**

(b) Gaja Ltd. issued 40,000 equity shares of ₹ 10 each to the public payable ₹ 2 on application, ₹ 5 on allotment and ₹ 3 on first and final call. Applications were received for 50,000 shares. The Directors decided to allot 40,000 shares on pro-rata basis and surplus of application money was utilised for allotment. Pass Journal entries assuming that the amounts due were received.

**44.** (அ) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு :

(i) ஈட்டிய இலாபங்கள் : 2016 - ₹ 25,000, 2017 : ₹ 23,000 மற்றும் 2018 : ₹ 26,000

(ii) 2016 -ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 2,500 சேர்ந்துள்ளது.

(iii) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹ 3,500 குறைக்கப்பட்டது.

(iv) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால் எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹ 250 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

**அல்லது**

(ஆ) சாம் நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து பொது அளவு வருமான அறிக்கையை தயாரிக்கவும்.

| விவரம் | 2015-16 ₹ | 2016-17 ₹ |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருமாய் | 4,00,000 | 5,00,000 |
| இதர வருமானம் | 80,000 | 50,000 |
| செலவுகள் | 2,40,000 | 2,50,000 |
| வருமான வரி | 30% | 30% |

(a) The following particulars are available in respect of the business carried on by a partnership firm.

(i) Profits earned : 2016 - ₹ 25,000, 2017 : ₹ 23,000 and 2018 : ₹ 26,000.

(ii) Profit of 2016 includes a non-recurring income of ₹ 2,500.

(iii) Profit of 2017 is reduced by ₹ 3,500 due to stock destroyed by fire.

(iv) The stock was not insured. But, it is decided to insure the stock in future. The insurance premium is estimated to be ₹ 250 per annum.

You are required to calculate the value of goodwill of the firm on the basis of 2 years purchase of average profits of the last three years.

**OR**

(b) Prepare common-size income statement for the following particulars of Sam Ltd.

| **Particulars** | **2015-16** ₹ | **2016-17** ₹ |
|---|---|---|
| Revenue from operations | 4,00,000 | 5,00,000 |
| Other income | 80,000 | 50,000 |
| Expenses | 2,40,000 | 2,50,000 |
| Income Tax | 30% | 30% |

**45.** (அ) ஒரு மன்றத்திற்கு தொடர்புடைய பின்வரும் விவரங்களிலிருந்து 2018 -ஆம் ஆண்டில் சந்தா மூலம் பெறும் வருவாயைக் கணக்கிடவும். மேலும், இவை, இருப்பு நிலைக் குறிப்பில் எவ்வாறு தோன்றும் என காட்டவும்.

| விவரம் | 1.1.2018 ₹ | 31.12.2018 ₹ |
|---|---|---|
| சந்தா பெற வேண்டியது | 3,000 | 5,000 |
| முன்கூட்டி பெற்ற சந்தா | 4,000 | 7,000 |

2018 -ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ₹ 45,000

**அல்லது**

(ஆ) இலக்குமி நிறுமத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| விவரம் | ₹ |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி | |
| நேர்மைப் பங்கு முதல் | 4,00,000 |
| 2. நீண்டகாலப் பொறுப்புகள் | |
| நீண்ட காலக் கடன்கள் | 2,00,000 |
| 3. நடப்பு பொறுப்புகள் | |
| (அ) குறுகிய காலக் கடன்கள் | 50,000 |
| (ஆ) கணக்குகள் மூலம் செலுத்த வேண்டியவை | 3,10,000 |
| (இ) இதர நடப்பு பொறுப்புகள் | |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 15,000 |
| (ஈ) குறுகிய கால ஒதுக்குகள் | 25,000 |
| **மொத்தம்** | 10,00,000 |
| II. சொத்துகள் | |
| 1. நீண்ட காலச் சொத்துகள் | |
| (அ) நிலைச் சொத்துகள் | |
| புலனாகும் சொத்துகள் | 4,00,000 |
| 2. நடப்பு சொத்துகள் | |
| (அ) சரக்கிருப்பு | 1,60,000 |
| (ஆ) வணிகக் கடனாளிகள் | 3,20,000 |
| (இ) ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு சமமானவைகள் | 80,000 |
| (ஈ) இதர நடப்பு சொத்துகள் | |
| முன்கூட்டி செலுத்திய செலவுகள் | 40,000 |
| **மொத்தம்** | 10,00,000 |

(i) நடப்பு விகிதம்

(ii) விரைவு விகிதம், கணக்கிடவும்.

(a) Compute income from subscription for the year 2018 from the following particulars in relation to a club.

| **Particulars** | **1.1.2018** | **31.12.2018** |
|---|---|---|
| | ₹ | ₹ |
| Outstanding subscription | 3,000 | 5,000 |
| Subscription received in advance | 4,000 | 7,000 |

Subscription received during the year 2018 ₹ 45,000

Show how these items will appear in final accounts of a club.

**OR**

(b) Following is the balance sheet of Lakshmi Ltd. as on 31.3.2019.

| **Particulars** | ₹ |
|---|---|
| I. Equity and Liabilities : | |
| 1. Share holder's funds | |
| Equity share capital | 4,00,000 |
| 2. Non-current Liabilities | |
| Long term borrowing | 2,00,000 |
| 3. Current Liabilities : | |
| (a) Short term borrowings | 50,000 |
| (b) Trade payables | 3,10,000 |
| (c) Other current Liabilities | |
| Expenses payable | 15,000 |
| (d) Short term provisions | 25,000 |
| **Total** | 10,00,000 |
| II. Assets : | |
| 1. Non current Assets | |
| (a) Fixed assets | |
| Tangible assets | 4,00,000 |
| 2. Current Assets : | |
| (a) Inventories | 1,60,000 |
| (b) Trade debtors | 3,20,000 |
| (c) Cash and Cash equivalents | 80,000 |
| (d) Other current assets | |
| Prepaid expenses | 40,000 |
| **Total** | 10,00,000 |

Calculate : (i) Current ratio (ii) Quick ratio

46. (அ) ஜான், ஜேம்ஸ் மற்றும் இராஜா என்ற கூட்டாளிகள் முறையே சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.3.2019 -ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹ | ₹ | சொத்துகள் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | அலுவலக சாதனங்கள் | | 70,000 |
| ஜான் | 80,000 | | இயந்திரம் | | 1,40,000 |
| ஜேம்ஸ் | 60,000 | | பற்பல கடனாளிகள் | 52,000 | |
| இராஜா | 1,00,000 | 2,40,000 | கழிக்க : வாரா ஐயக் கடன் ஒதுக்கு | 2,000 | 50,000 |
| பற்பல கடனீந்தோர் | | 1,20,000 | சரக்கிருப்பு | | 60,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 40,000 |
| | | 3,60,000 | | | 3,60,000 |

2019, மார்ச் 31 -ஆம் நாளன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இராஜா கூட்டாண்மையிலிருநது விலகினார்.

(i) இயந்திரம் ₹ 1,30,000 ஆக மதிப்பிடுவது

(ii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ₹ 2,000 குறைப்பது.

(iii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ₹ 3,000 ஆக உயர்த்துவது.

(iv) ஏடுகளில் பதிவு பெறாமல் உள்ள முதலீடுகள் ₹ 25,000 பதிவு செய்ய வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

**அல்லது**

(ஆ) முத்து நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து ஒப்பீட்டு நிதிநிலை அறிக்கையை தயாரிக்கவும்.

| விவரம் | 2017 மார்ச் 31 ₹ | 2018 மார்ச் 31 ₹ |
|---|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 |
| நடப்பு பொறுப்புகள் | 75,000 | 82,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |
| II. சொத்துகள் | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 |
| மொத்தம் | 6,25,000 | 6,87,500 |

(a) John, James and Raja are partners in a firm sharing profits and losses equally. Their balance sheet as on 31st March 2019 is as follows.

| Liabilities | ₹ | ₹ | Assets | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| Capital accounts | | | Office equipment | | 70,000 |
| John | 80,000 | | Machinery | | 1,40,000 |
| James | 60,000 | | Sundry Debtors | 52,000 | |
| Raja | 1,00,000 | 2,40,000 | Less : Provision for doubtful debts | 2,000 | 50,000 |
| Sundry creditors | | 1,20,000 | Stock | | 60,000 |
| | | | Cash at Bank | | 40,000 |
| | | 3,60,000 | | | 3,60,000 |

Raja retired on 31-3-2019 subject to the following conditions :

(i) Machinery to be valued at ₹ 1,30,000

(ii) Value of office equipment to be brought down by ₹ 2,000

(iii) Provision for doubtful debts should be increased to ₹ 3,000

(iv) Investment of ₹ 25,000 not recorded in the books is to be recorded now.

Pass necessary journal entries and prepare revaluation account

**OR**

(b) From the following particulars, prepare comparative statement of financial position of Muthu Ltd.

| Particulars | 31st March 2017 ₹ | 31st March 2018 ₹ |
|---|---|---|
| I. Equity and Liabilities | | |
| Share holder's fund | 4,00,000 | 4,40,000 |
| Non-current liabilities | 1,50,000 | 1,65,000 |
| Current liabilities | 75,000 | 82,500 |
| Total | 6,25,000 | 6,87,500 |
| II. Assets | | |
| Non-current Assets | 5,00,000 | 6,00,000 |
| Current Assets | 1,25,000 | 87,500 |
| Total | 6,25,000 | 6,87,500 |

**47.** (அ) ரமா நிறுமத்தின் பின்வரும் வணிக நடவடிக்கையிலிருந்து

(i) மொத்த இலாப விகிதம்

(ii) நிகர இலாப விகிதம்

(iii) இயக்க அடக்கவிலை விகிதம்

(iv) இயக்க இலாப விகிதம்

கணக்கிடவும்.

**இலாப நட்ட அறிக்கை**

| விவரம் | ₹ |
|---|---|
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 2,00,000 |
| II. இதர வருமானம் | |
| முதலீடு மூலம் வருவாய் | 2,000 |
| III. மொத்த வருவாய் [I+II] | 2,02,000 |
| IV. செலவுகள் : | |
| கொள்முதல் செய்த சரக்குகள் | 1,05,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 15,000 |
| நிதிசார் செலவுகள் | 12,000 |
| இதர செலவுகள் (நிர்வாகம் மற்றும் விற்பனை) | 30,000 |
| மொத்த செலவு | 1,62,000 |
| V. அவ்வாண்டிற்கான வரிக்கு முன்னர் உள்ள இலாபம் (III-IV) | 40,000 |

**அல்லது**

(ஆ) கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.

(a) From the following trading activities of Rama Ltd. calculate :

(i) Gross profit ratio (ii) Net profit ratio

(iii) Operating cost ratio (iv) Operating profit ratio

**Statement of Profit and Loss**

| **Particulars** | | ₹ |
|---|---|---|
| I. | Revenue from Operations | 2,00,000 |
| II. | Other income | |
| | Income from investments | 2,000 |
| III. | Total revenues [I+II] | 2,02,000 |
| IV. | Expenses : | |
| | Purchase of stock-in-trade | 1,05,000 |
| | Changes in inventories | 15,000 |
| | Finance costs | 12,000 |
| | Other expenses (Administration and selling) | 30,000 |
| | Total expenses | 1,62,000 |
| V. | Profit before tax (III-IV) | 40,000 |

**OR**

(b) Explain any five applications of computerised accounting system.

- o 0 o -